**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 63/2022 |
| Deposition of witness | | PW-8 /LW-9 |
| Name | | திரு.முத்துகுமார் |
| Father's/Husband Name | | திரு. அப்பாசாமி |
| Village | | தஞ்சாவூர் |
| Taluk | | தஞ்சாவூர் |
| Age | | 39/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23th day of july 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திருமதி. உஷா (உதவியாளர்) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**(சாட்சியை நீதிமன்ற முதல்நிலை காவலர் 1375 மனோபாரதி என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வாட்டாத்திக்கோட்டை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் சுரேந்திரன் என்பவர் வழக்கு பதிவு செய்த குற்ற எண்.154/2018 என்ற வழக்கினை முதல் விசாரணை முடித்து மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம்சென்று சாட்சிகளை விசாரித்தபோது, முதல் விசாரணை அதிகாரியிடம் சொன்னதையே என்னிடமும் சாட்சிகள் வாக்குமூலமாக சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட ராஜசேகர் என்பவருக்கு சிகிச்சை அளித்த பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. ராஜசந்திரசேகர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அவர்களிடம் இருந்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றேன். அவர் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று கருத்துரை வழங்கினார். இவ்வழக்கின் முதல் விசாரணை அதிகாரி சிறப்பு உதவி ஆய்வாளர் சுரேந்திரன் என்பவரை

விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து 05.10.2018 அன்று எதிரிகள் மீது 294(b), 342,323,506(2) இ.த.ச.-வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையிலும், வாக்குமூலம் அடிப்படையிலும்தான் நான் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான். இவ்வழக்கில் ராஜசேகரன் என்பவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்று சொன்னால், சரிதான். சம்பவம் நடந்த இடமானது அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரியின் ஒரே வீடு என்றும், இரண்டு வாசல் என்று சொன்னால், சரிதான். அ.சா.1-னுடைய தம்பி மகன் ஆஜர் எதிரி என்றால், சரிதான். இவ்வழக்கு காரணம் வீட்டிற்கு முன்பு உள்ள சீதா மரத்தை வாதி வெட்டியதால்தான் என்றால், சரிதான். நான் சம்பவத்தை விசாரித்தபோது சீதாமரமானது யாருக்கு சொந்தமானது என்றும், யார் பாகத்தில் அந்த மரம் பிரிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தினையும், VAO வையும் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லைஎன்றும், ஆவணங்களை பரிசீலனைசெய்யவில்லை என்று சொன்னால், சரிதான். புகார் வாக்குமூலத்தில் சம்பவத்தின் போது யார் இருந்தார்கள் என்றும், அதை யார் பார்த்தார்கள் என்றும் குறிப்பிட்டு அதில் கூறவில்லை என்றால், சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால், சரிதான்.

2. சாட்சிகளை நான் எந்த தேதியில் விசாரித்தேன் என்று வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால், சரியல்ல. அந்த வாக்குமூலத்தில் நான் கையொப்பத்தில் தேதியை குறிப்பிடவில்ல என்று சொன்னால், சரிதான், ஆனால் மேலே தேதி குறிப்பிட்டுள்ளது.

3. நான் வழக்கை எந்த தேதியில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால், 05.10.2018 ஆகும். நான் வாட்டாத்திக்கோட்டை காவல்நிலையத்தில் எத்தனை வருடங்களாக பணியாற்றினேன் என்றால், 1 1/2 வருடங்கள் ஆகும்.

அந்த 1 1/2 வருடங்களில் அ.சா.1-ன் குடும்பத்திற்கும், எதிரிகளின் குடும்பத்திற்கும் எத்தனை வழக்குகள் எங்கள் காவல்நிலையத்தில் இருந்தது என்றால், ஞாபகம் இல்லை. இரண்டு குடும்பத்தினருக்கும் இடம் பிரச்சனை சம்பந்தமாக வழக்கு எங்கள் காவல்நிலையத்தில் உண்டா என்றால், ஞாபகம் இல்லை. அதைபோல் இவ்வழக்கு சம்பந்தமாக தடய பொருள் எதுவும் கைப்பற்றவில்லை என்று சொன்னால், சரிதான். ஆவணங்களை சரிவர பரிசீலணை செய்யாமலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும், எதிரிகளின் மேல் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும், எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதியப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நிதிமன்றம்,
பட்டுக்கோட்டை.